**மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசாா் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிா்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடா்ந்தியங்கும் இயலுமையை தீா்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் காசு அல்லது காசுக்குச் சமமானவைகளை ஈடுபடுத்தி தேவையற்ற முதலீடுகள் மற்றும் காசு கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் இருந்து நீக்கப்படல் வேண்டும். | ஏதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துவதற்கு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் அந்த முதலீடுகள் மற்றும் செயற்பாடுகளுக்கு உரிய சகல தகவல்களையும் வழங்கும் முறையில் நிதிக்கூற்றுக்களில் ஏதோ ஒரு இடத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும். எனினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்திற்காக வழங்குனருக்கு செலுத்தவேண்டிய ரூபா 17,555,328 பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் அகற்றப்பட்டிருந்த போதிலும் அதில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதியிலான தவறு, முன்னைய காலப்பகுதிக்குரிய குறித்த தாக்கம் அல்லது தவறுகளை உள்ளடக்கிய தாக்கங்களை ஒழுங்குபடுத்துதல் பிரயோக ரீதியில் இல்லாதிருந்ததால் தவிர, எதிர்கால ரீதியில் மீண்டும் சரிசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டில் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 15,288,355 தொகை திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப் பகுதிக்குரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்பட்ட ரூபா 28,402,024 தொகையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலையாக | ஐந்தொகையில் கடந்த ஆண்டுக்குரிய மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 6,064,171,771 ஆக குறிப்பிடப்பட்டமை அச்சிடல் வழுக்களாக இருந்ததுடன் சரியான பெறுமதி ரூபா 5,530,582,524 ஆக இருந்ததை அறியத்தருகின்றோம். | சரியாக நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 971,248 மற்றும் முன்னைய ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 3,083,782 ஆக பெறுமானத் தேய்விற்காக சீராக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | கட்டிட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 15,751,930 செலவினத்துக்குரிய செயற்திட்டத்தை சரியாக இனங்கண்டு மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தின் போது இந்த சொத்துக்களை சரியாக இனங்கண்டு மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | முறையான பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உடன்படிக்கை இரத்துச் செய்து நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்த பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்ற ரூபா 17,019,680 தொகையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 231,839 சீராக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவால் குறைவடைந்திருந்தது. | தவறொன்றினால் ரூபா 17,019,680 தொகையான உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 19,575,119 செலவினம், அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டின் இலாபம் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆட்டுறு செலவினத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட ரூபா 19,575,119 தொகை விலங்கு உணவு செலவினம் ரூபா 2,078,797 தொகை தவறொன்றினால் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் மிகுதி தொகையை கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தமைக்கு 2022 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் அந்த பட்டியல்கள் வழங்குனர்களினால் சமர்ப்பிக்காமையினால் ஏற்பட்டதை அறியத்தருகின்றோம். | முறையான பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | சிற்றுண்டிச்சாலை வாடகை வருமானத்தை இனங்காணும் போது உடன்படிக்கையில் | இந்த ரூபா 449,758 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதனை | வருமானங்களை சரியாக கணிப்பிடல் |

| | | |
|---|---|---|
| குறிப்பிடப்பட்ட பிரகாரம் வருமானம் கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் சிற்றுண்டிச்சாலை வாடகை வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 449,758 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் இண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | வேண்டும். |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் மீதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் பிரதான சிற்றுண்டிச்சாலையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 10,777,115 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த பெற வேண்டிய மீதி (வற் உடன்) ரூபா 9,142,083 ஆகும். அதன் பிரகாரம் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 1,635,032 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | **10,777,115** | **9,142,083** | **1,635,032** | ஏதிர்வரும் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பெறவேண்டிய வருமானத்தை சரியாக இனங்காணல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரி வைப்புக் கணக்கின் மீதி திறைசேரி குறிப்புகளின் பிரகாரமான மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 37,790,953 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் | 2,205,052,703 | 2,167,261,750 | 37,790,953 | நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரி வைப்புக்கணக்கில் 2021.12.31 இல் உள்ளவாறு மீதி திறைசேரி குறிப்புக்களின் மீதியுடன் ஒப்பிடும் போது வேறுபாடாக | முறையான பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் காணப்பட்ட வேறுபாடுகள் மேலும் ரூபா 4,560,927 இனால் அதிகரித்திருந்தது. | | காண்பிக்கப்பட்ட ரூபா 37,790,953 இற்காக வைப்புக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல்கள் தாக்கமளித்திருந்ததை அறியத்தருகின்றோம். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2019 செப்டெம்பர் 09 ஆம் திகதிய கடிதத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக மிருகக்காட்சிசாலைகளில் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபார கடைகள் 2019 ஏப்ரல் முதல் யூன் வரை மூடப்பட்டிருந்த காலப்பகுதிகளுக்குரிய கட்டணங்களை அறவிடல் தொடர்பான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 4,782,701 தொகையான நிலுவை வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு செயலாளருக்கு அறிவிக்கப்பட்ட பிரகாரம் திணைக்கள குழு ஊடாக அறவிட வேண்டிய பணம் தீர்மானிக்கப்பட்டு அங்கீகாரத்துக்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர் உரிய நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | நிலுவை வாடகையை அறவிடுதல் தொடர்பாக விரைவாக தீர்மானம் எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் பந்திகள் | பெறுகைகளை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் முதல் முடியும் வரை ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளினதும் கட்டங்கள் ஒழுங்கு முறையாக விபரிக்கப்பட்டு பெறுகை கால அட்டவணை | எதிர்வரும் ஆண்டுக்குரிய பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கும் போது மருந்து பெறுகைகள் ஒவ்வொரு பெறுகைகள் செயற்பாடுகளினதும் கட்டங்கள் ஒழுங்குமுறையாக கால ரீதியில் விபரிக்கப்பட்டு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட வேண்டிய இருந்த போதிலும் 2018/2019 மற்றும் 2020/2021 ஆம் ஆண்டுகளுக்காக மருந்துகளை கொள்வனவு செய்யும் பெறுகையின் போது இவ்வாறான கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | பெறுகை செயல்வழிக் கோவையின் 8.9.3 ஆம் பிரிவு | பெறுமதி ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக முறையான எழுத்து மூல உடன்படிக்கை எழுதி கையொப்பமிட வேண்டியிருந்த போதிலும் 2018/2019 ஆம் ஆண்டுக்காக ரூபா 627,775 தொகை மற்றும் 2020/2021 ஆண்டுக்காக ரூபா 521,953 தொகையான மருந்து கொள்வனவு செய்யும் பெறுகைகளின் போது உரிய தனியார் கம்பனியுடன் முறையான எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடுதல் தேவையாக இருந்தமையால் அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (இ) | மருந்து மற்றும் மருந்து உபகரணங்கள் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5:2:1ஆம் பிரிவு | மருந்து மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கட்டமைப்பு சுகாதார அமைச்சின் முகவர் ஒருவர், அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதி ஒருவர், விடய துறையில் ஆலோசனையாளரில் ஆகக் குறைந்தது இருவர், துறைசேரியின் பிரதிநிதி ஒருவர் | எதிர்வரும் ஆண்டு முதல் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்ருகின்றோம். | மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அல்லது தேசிய பெறுகை முகவராண்மையின் பிரதிநிதி ஒருவரையும் உள்ளடக்க வேண்டி இருந்த போதிலும் 2018/2019 ஆம் ஆண்டிற்காக மருந்து கொள்வனவு செய்யும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் மூன்று பேர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். | | |
| (ஈ) 2019 ஒக்டோபர் 29ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 270/2019 | | பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்துள்ள திணைக்களத்தால் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு வரி CIGAS முறைமையில் தாபிக்கப்பட்ட 9185 என்ற கட்டுப்பாட்டுக் கணக்கில் இனங்கான வேண்டியிருந்த போதிலும் பெறுமதி சேர் வரியின் சட்ட ரீதியான அதிகாரம் இன்றிய மிருகக்காட்சி சாலை அபிவிருத்தி நிதியத்தின் கணக்கில் ரூபா 20,860,288 ஆன பெறவேண்டிய வரி கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் சிகாஸ் கணணி முறை மூலம் பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு ஆண்டின் இறுதிக்கு முன்னர் வரி கணக்கீடு செய்தல் சிகாஸ் முறைமை மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 558,081,259 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 409,287,647 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 148,793,612 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. கொவிட் - 19 தொற்றுநோயினால் மீளாய்வாண்டில் சில மாதங்கள் சகல மிருக்காட்சிசாலைகளையும் மூடவேண்டியிருந்தமையின் காரணமாக வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 92,364,343 இனால் குறைவடைந்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 – 2022 ஆம் ஆண்டுகளுக்காக பின்னவல யானை சரணாலயத்திற்கு பழங்களை வழங்கும் உடன்படிக்கையின் பிரகாரம் புளிவாழை, வத்தகப் பழம், அன்னாசி கிலோகிராம் அலகு சராசரியான விலையினை விட அதிகரித்த விலையில் பழங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் பழங்கள் வழங்கும் விலை மற்றும் சந்தை விலைகளை ஒப்பிடும் போது ஒப்பந்தக் கிரயம் ரூபா 19,394,640 இனால் அதிகரித்திருந்தது. வழங்கும் ஒப்பந்த நிபந்தனையின் அடிப்படையில் 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் 2021 திசெம்பர் 31 வரை சந்தை விலையினை விட அதிக விலையில் பழங்கள் 44,513 கிலோகிராம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 3,724,156 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. | பழங்களை வழங்கும் போது பெறுகை குழுவினால் கூறுவிலையினை குறைத்துக் கொள்வதற்காக கலந்துரையாடி ரூபா 5,952,420 தொகையை குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் கேள்விதாரரிடம் இருந்து எதிர்வரும் ஒரு ஆண்டு காலத்திற்காக கூறுவிலை எதிர்வுகூறி விலைகள் சமர்ப்பித்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். | விலங்கு உணவுகளை கொள்வனவு செய்யும் போது கிரயத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு பழங்களை வழங்கும் உடன்படிக்கை நிபந்தனையில் இணங்கப்பட்ட விலைகள் அந்த பழங்களின் சராசரியான சந்தை விலையினை விட கணிசமாக அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் சந்தை விலையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 6,369,017 மேலதிக விலையில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்த நிபந்தனையின் அடிப்படையில் சந்தை விலையினை விட அதிகரித்த விலையில் பழங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமையினால் ரூபா 1,725,261 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்கவேண்டி ஏற்பட்டிருந்தது. | பழங்களை வழங்கும் போது கேள்விதாரருடன் கலந்துரையாடி மொத்த ஒப்பந்த பெறுமதியில் ரூபா 10 மில்லியன் அளவு குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் இறக்குமதி செய்யப்படுகின்ற பழங்களுக்காக விதிக்கப்பட்ட வரி, தொற்றுநோய் நிலமையினால் பழங்களை கண்டறிவதில் கஷ்டமான நிலமையின் காரணமாக விலைகள் அதிகரிப்பதற்கு தாக்கமளித்திந்ததை அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரிதியகம சபாரி பூங்காவில் ரூபா 7.2 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 12 கிராமிய விற்பனை நிலையங்கள் 2018 மார்ச் 22 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | இந்த கிராமிய விற்பனை சாலைகளை வாடகைக்கு வழங்குவதற்காக தற்போது பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | சொத்துக்களை செயற்றிறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆண்டின் போது ரூபா 66 மில்லியன் செலவில் 136 வெளிநாட்டு பறவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த பறவைகளை காட்சிப்படுத்துவதற்காக நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட அம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் பறவைகள் கூட்டை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்காரணமாக 57 பறவைகள் காட்சிப்படுத்தப்படாமல் சபாரி பூங்காவில் வேறொரு கூட்டில் வைக்கப்பட்டிருந்தது. | இந்த வெளிநாட்டு பறவைகள் கூடுகளை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய வலை வகை இறக்குமதி செய்யப்படல் வேண்டும். எனினும் நாட்டில் உள்ள டொலர் நெருக்கடியின் அடிப்படையில் இந்த வலையை இறக்குமதி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த நிலைமை சீராகியதுடன் இந்த நிர்மாணங்களை பூர்த்தி செய்ய முடியும் என அறியத்தருகின்றோம். | விலங்குகளை கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் ஆரம்பிப்பதுடன் விலங்குகளை காட்சிப்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகளும் திட்டமிடப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் பெறுமதி ரூபா 82,334,768 ஆன மூன்று செயற்திட்டங்கள் நலிவான செயலாற்றலின் காரணமாக உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டங்களுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 26,942,651 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | தற்போது தேசிய இயந்திர உபகரண அதிகார சபையினால் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் சிவில் பாதுகாப்பு படையணி மூலம் ஒவ்வொரு செயற்திட்டமாக நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |